# புலம் பெயர்ந்து கனடாவில் ஒன்ரேறியா மாகாணத்தில் வாழும் பட்டதாரி ஆசிரியர்கள் ,ஆசிரியத் தொழிலைப் பெறுவதற்கான சில பொதுவான தகவல்கள்

இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பட்டம் பெற்று ஆசிரியர்களாகச் சேவையாற்றி யவர்கள் அல்லது புதிதாக ஆசிரிய சேவையாற்ற விரும்புபவர்கள் முதலில் தம்மை ஒன்ரேறியா ஆசிரியர் கல்லூரியில் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இக்கல்லூரி யங்,புளொர் சந்திக்கருகாமையில்,புளொர் வீதியில் 121ஆம் இலக்கக் கட்டிடத்தில் ஆறாவது மாடியில் அமைந்துள்ளது. இக்காரியாலயத்திற்குச் சென்று பதிவு செய்வதற்கான படிவத்தைப் பெற்று அதனைப் பூரணப்படுத்திக் கையொப்பமிடுவதுடன், தேவையான ஆவணங்களையும், சேவைக்கான கட்டணமாக 305 கனடிய டொலர்களையும் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர் கல்லூரி உங்களின் கல்வித் தகமைகளை மதிப்பீடு செய்து, அங்கு கேட்கப்பட்ட தேவைகளை திருப்திப் படுத்தினால் கல்லூரி உங்களுக்கான கற்பித்தலுக்குரிய இடைக்கால அனுமதிச் சான்றிதழை வழங்கும். இச்சான்றிதழில் உங்களின் கற்பித்தலுக்கான கல்விசார் பாடங்களும், நீங்கள் ஆரம்ப,கனிட்ட,இடைநிலை,சிரேஷ்ட பிரிவுகளில் எந்தப் பிரிவுகளில் கற்பிக்க முடியும் என்பது பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கும். இச்சான்றிதழ் ஒன்ரேறியா மாகாணத்தில் கற்பிப்பதற்கான ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரமாகும்.

உங்களுடைய தற்காலிக கற்பித்தலுக்கான அனுமதிச் சான்றிதழுடன் இணைத்துத் தரப்படும் பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள விடயங்களைப்பூர்த்தி செய்ததும் உங்களுக்கான நிரந்தரக் கற்பித்தல் சான்றிதழ் வழங்கப்படும். ஆசிரியர் கல்லூரியினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்திக் கையொப்பமிடுவதுடன் ,படிவத்துடன் சமர்பிக்கும்படி கேட்கப்பட்ட சகல ஆவணங்களும் ,அதற்கான கட்டணமும் சமர்ப்பிக்கும் வரை உங்களின் அங்கத்தவருக்கான விண்ணப்பம் சார்பாக கல்லூரியினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத ஆவணங்கள் அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

நீங்கள் அனுப்பும் ஆவணங்கள் யாவும் ஒன்ரேறியா ஆசிரியர் கல்லூரியின் சொத்தாகப் பாதுகாக்கப்படும். அவற்றை உங்களிடம் திருப்பித் தரவோ அன்றேல் வேறு நிறுவனங் களுக்கு ஒப்படைக்கப்படவோமாட்டாது. இக்கல்லூரி மற்றைய நிறுவனங்களால் அனுப்பப் படும் உங்களின் கல்வித்தகமைகள்,மதிப்பீடுகள்பற்றிப் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளும் ஆனால் அவற்றைக் கட்டாயம் கருத்திற் கொள்ள வேண்டுமென்றோ, ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ கடப்பாடுடையதாகாது. கல்லூரி நிர்வாகம் தேவைப்படின் மேலதிகமான ஆவணங்களையும் உங்களிடம் கேட்கலாம்.

உங்களின் ஆங்கிலம் அல்லது பிரெஞ் மொழியில் இல்லாத ஆவணங்கள் யாவும் கல்லூரியின் மொழி பெயர்ப்புக் கொள்கைக்கேற்ப ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்திருத்தல் வேண்டும்.

ஆசிரியராவதற்குத் தேவையான அடிப்படைத் தகமைகள்

1. ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிச் சான்றிதழ, குறைந்தது மூன்று வருடங்களுக்கான முழுநேரப் படிப்பிற்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்.

அத்துடன் இச்சான்றிதழை வழங்கிய கல்வி நிறுவனம் பதிவாளரால் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகவும் இருக்கவேண்டும்.

2. உங்களது கற்பித்தல் சம்பந்தமான கல்விப் பயிற்சி குறைந்தது ஒரு வருட முழு நேரப் படிப்பாகவிருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு பிரிவுகளில் கற்பிக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். (உம்~ஆரம்ப, கனிட்ட அல்லது கனிட்ட ,இடைநிலை, அல்லது இடைநிலை,சிரேஷ்ட வகுப்புக்கள்)

3. கனிட்ட இடைநிலை ஆசிரியர்கள் படிப்பிக்கப் போகும் பாடங்களில் குறைந்தது ஒரு செயல்முறை நெறியிலாவது பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். இடைநிலை, சிரேஷ்ட ஆசிரியர்கள் கற்பிக்கப்போகும் பாடங்களில் இரண்டு செயல்முறை நெறிகளில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். இடைநிலை, சிரேஷ்ட ஆசிரியர்கள் ஒரு பாடத்தில் மட்டும் செயல் முறைப் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு ஒரு நிபந்தனையுடன் கூடிய சான்றிதழே வழங்கப் படும்.

4. நீங்கள் முன்னர் கற்பிக்காவிட்டாலும், நீங்கள் கற்பித்தல் பயிற்சியைப் பெற்ற கல்வி நிறுவனம் வழங்கிய சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

5.கல்விசார் பாடங்களையும், ஆசிரியர் கல்வியையும் கொண்ட நெறிகள் நான்கு வருட முழு நேரப் படிப்பிற்குச் சமமானதாகவிருந்து ஒன்ரெறியா 12ம் வகுப்பிற்கு மேற்பட்டதாகவிருந்தால் அவையும் கருத்தில் எடுக்கப்படும்.

6.ஆசிரியர் சேவைக்கு முற்பட்ட ஆசிரியர் கல்வியை, உயர்தரப்பாடசாலைகளில் பூர்த்தி செய்திருந்தால்,அல்லது தபால் தொலைக்கல்வி மூலம் பெற்றிருந்தால் அக் கல்விச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

நீங்கள் ஆசிரியர் கல்லூரியில் உங்களைப் பதிவு செய்வதற்கு செய்ய வேண்டியனவும், சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும்:~

1. ஆசிரியர் கல்லூரியில் பெற்ற விண்ணப்பப் படிவத்தின் உண்மையான பிரதியைப் பூரணப்படுத்தி உங்கள் கையொப்பத்தையிட்டுச் சமர்பித்தல் வேண்டும்.

2.தொழில் சம்பந்தமான கேள்விகளுக்கான விடைகளைப் பூரணப்படுத்திய படிவமும். குற்றச் செயல்களில் ஈடுபடவோ,குற்றவாளியாகக் காணப்படவோ இல்லை என்பதை வெளிப்படுத்தும் பிரகடனப் படிவமும் உங்கள் கையொப்பத்துடனும், அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பத்துடனும் சமர்பித்தல் வேண்டும்.

3. உங்களின் முதற் பெயர், கடைசிப் பெயர்,பிறந்த திகதி,பிறந்த இடம் என்பவற்றை உறுதிப் படுத்துவதற்கான பிறப்புச் சான்றிதழின் பிரதி அல்லது கடவுச்சீட்டின் பிரதி

4. பெயர்களில் மாற்றங்கள் நடை பெற்றிருந்தால் அவற்றை உறுதிப் படுத்துவதற்கான கடிதங்கள்.

5. கனடிய சமூகக் காப்புறுதி அட்டையின் பிரதி

6. கனடாவிற்கு வெளியில் பிறந்திருந்தால், நிரந்தர வதிவுரிமைப் பத்திரம் அல்லது வேலை செய்வதற்கான அனுமதிக்கடிதம் அல்லது கனடியப் பிரஜா உரிமை அட்டை.

7. ஆறுமாதங்களுக்குள் பொலிசார் காரியாலயத்திலிருந்து பெற்ற குற்றப்பதிவு
விசாரணை
அறிக்கை.

8. ஒரு வருடத்திற்குள் பெறப்பட்ட ,கயரோகத்தால் பீடிக்கப் படவில்லை என்பதை உறுதிப் படுத்தும் வைத்திய பரிசோதனைக் கடிதம்.

9. ஒன்ரேறியா மாகாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் நீங்கள் பெற்ற, உங்களின் கற்பித்தலுக்கான சான்றிதழ்களின் பிரதிகள்.இவை அவ்விடங்களில் நீங்கள் கற்பித்தலில் ஈடுபடாதிருந்தாலும் சமர்பிக்கவேண்டும்.

10. திரும்பப் பெறமுடியாத,பதிவுசெய்தல்,மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்கான கட்டணமான 305 கனடிய டொலர்களைச் செலுத்துதல் வேண்டும்

11.கற்பித்தலுக்கான உங்களின் பயிற்சியை ஆங்கிலம் அல்லது பிரெஞ் தவிர்ந்த ஏனைய மொழிகளில் பெற்றிருந்தால் ஒன்ரேறியா கல்வி அமைச்சினால் வகுக்கப் பட்டு ஒன்ரேறியா அதிபர் சபையினால் நடாத்தப்படும் ஆங்கிலத்திற்கான ஒன்ரேறியா கல்லூரிப் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.
இதன்முக்கிய நோக்கம் ஆசிரியர்கள் ஒன்ரெறியா மாகாணத்தின் ஆட்சி மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ் மொழிகளில் தொடர்பு கொள்ளக் கூடிய போதி அறிவைப் பெற்றிருத்தல் அவசியமென்பதாகும்.

12. உங்களின் ஆசிரியர் கல்விக்கான சான்றிதழ்கள்,பட்டப்படிப்பிற்கான சான்றிதழ்களின் கையெழுத்துப் பிரதிகளை உங்களுக்கு வழங்கிய கல்வி நிறுவனங்கள் ஒன்ரேறியா ஆசிரியர் கல்லூரியின் பதிவாளருக்கு உரிய கையொப்பங்களுடன் நேரடியாக முத்திரையிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற் கூறிய நிபந்தனைகள் காலத்திற்குக் காலம் மாற்றம் பெறலாம்.

மேலதிக விபரங்களைக் கல்லூரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் , கல்லூரியின் கைநூலை வாசிப்பதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

(இவை 2003 ஆம் ஆண்டு ஒன்ரேறியா மாகாண ஆசிரியர்
கல்லூரியின்
கைநூலிலிருந்து பெறப்பட்ட சில தகவல்களாகும்)

சு.சிவநாயகமூர்த்தி

உப செயலாளர
இ.ப.சங்கம்